# வாடிவாசல்



சி.சு.செல்லப்பா

# பதிப்புரை

எமது ஒன்பதாவது வெளியீடாக சி. சு. செல்லப்பா அவர்களின் பதினொரு சிறுகதைகளை முதல் தொகுதியாக வெளியிடுகிறோம். ஏனைய கதைகளை தொகுதி தொகுதிகளாக வெளியிட திட்டமிட்டுள்ளோம். இலக்கிய சுவைஞர்களுக்கு சி. சு. செல்லப்பாவை அறிமுகப்படுத்த தேவையில்லை. ஆனாலும் அவரைப்பற்றி நினைவுபடுத்திக் கொள்ளும் முகத்தான் சில சொற்கள் சொல்ல வேண்டியிருக்கிறது. தமிழ் இலக்கியத்தில், சிறுகதை சாதனைச் செய்த 'மணிக் கொடி' குழுவைச் சார்ந்தவர். நூற்றுக்கும் மேலான சிறு கதைகளும் நாவல் ஒன்றையும் எழுதியவர். தமிழில் விமர்சன மேதையாகத் திகழ்பவர். சிறப்புமிக்க 'எழுத்து' என்ற சிற்றேட்டை பத்தாண்டுகள் நடத்தி, திறனாய்வுக்கும், புதுக்கவிதைக்கும் ஆக்கமும் ஊக்கமும் அளித்து நிலைத்த புகழ் பெற்றவர்.

சிறுகதை எந்த வரையிலக்கணத்திற்கும் உள்ளடங்காதது. ஆதலால் அதன் தன்மைகளை) கூறுகளை, உள்ளார்ந்த முரண்பாடுகளை, கதை மாந்தரின் குணவளர்ச்சிக்கான மேற்கொள்ளப்படும் உத்திகளை நான்காக வகுத்துப் பார்க்கலாம்.

நான்கு தன்மைகள் (1) ஒரே ஒரு முரண்பாடு அல்லது நிகழ்ச்சி. (2) சிறியது (3) ஒரே ஒரு கருத்து அல்லது மனப்பதிவின் வெளிப்பாடு.

நான்கு கூறுகள்: (1) கதையமைப்பு—செய்கை அல்லது முரண்பாடு—போராடும் எதிரும் புதிரான சக்திகள். (2) கதை மாந்தர்கள். செயலை நடத்திச் செல்லும் பாத்திரங்கள் அல்லது நிகழ்ச்சிகள். (3) கோட்பாடு. அதாவது சிறுகதையாசிரியன் காட்ட விரும்பும் வாழ்வைப் பற்றிய பொதுவான உண்மை. (4) பின்னணி. கதை நிகழ்ச்சியின் காலமும் இடமும். இவை சூழலில் அடங்குவன. படிப்பவனின் மனதில் சூழல் சித்தரிப்பு எழுப்பும் மனோபாவம்.